Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,PAPPIREDDIPATTI

Calendar Case No.C.C.No.239/2025

Deposition of Sworn Statement

| | |
|---|---|
| Name | : **மாரப்பன் (** காவல் உதவி ஆய்வாளர்**)** |
| Father's Name/Husband Name | : மாணிக்கம் |
| Village | : பாப்பிரெட்டிப்பட்டி |
| Taluk | : பாப்பிரெட்டிப்பட்டி |
| District | : தருமபுரி |
| Caste | : |
| Calling | : PW3 |
| Religion | : Hindu |
| Age | : 61 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16.07.2026

**எதிரி ஆஜர் . எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை.**

நான் கடைசியாக பொம்மிடி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி பணி ஓய்வு பெற்று தற்போது பாப்பிரெட்டிப்பட்டியில் குடியிருந்து வருகிறேன்.

கடந்த 25.05.2025 ம் தேதி காலை 11.00 மணியளவில் நான் பொம்மிடி காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோது எனது தலைமையில் நானும் என்னுடன் அ.சா.1, மற்றும் முதல் நிலை காவலர் வைரவேல் ஆகியோருடன் எனக்கு கிடைத்த தகவலின்பேரில் மது விலக்கு குற்றம் தடுப்பு சம்பந்தமாக பொம்மிடி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட B.பள்ளிப்பட்டி கிராமத்தில் அருகே கண்கானித்து கொண்டிருந்தபோது எதிரியின் வீட்டின் பின்புறம் சந்தேகத்தின்பேரில் பிடித்து சோதனை செய்தபோது வெள்ளை நிறப்பையில் 180 ML அளவு கொண்ட Old Chef Brandy 27 பாட்டில்களை வைத்திருந்தார். எதிரி எங்களை கண்டவுடன் தப்பிஓட முயன்றவரை போலிஸ் பார்டி உதவியுடன் சுற்றி வளைத்து பிடித்து விசாரித்தபோது அவர் அரசு மதுபானத்தை மொத்தமாக வாங்கி வந்து பொதுமக்களிடம் சில்லரையில் பாட்டில்களை அதிக விலைக்கு விற்பணை செய்ய வைத்திருந்ததை ஒப்புக்கொண்டார். எதிரியை நான் அந்த இடத்திலேயே கைது செய்தேன்.

மேலும் தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லாததால் என்னுடன் வந்த காவலர்கள்

முன்னிலையில் எதிரியிடம் இருந்து மேற்படி மதுபான பாட்டில்களை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன்.

கைப்பற்றுதல் மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட மது பாட்டில்களை சம்பவயிடத்திலேயே எனது உயர் அதிகாரியின் உத்தரவின்பேரில் அந்த இடத்திலேயே கொட்டி அழித்தேன்.

**அழித்தல் மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.**

பின்னர் எதிரியை நிலையம் கொண்டு வந்து பொம்மிடி காவல் நிலைய குற்ற எண் 99/2025 சட்டபிரிவுகள் 4(1)(C) TNP ACT படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன்

**முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் எதிரியை நிலைய பிணையில் விடுவித்தேன்.

சாட்சிகள் 1 மற்றும் 2 ஐ தனிதனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

அத்துடன் எனது புலன் விசாரணையை முடித்து 25.05.2025 ம் தேதி எதிரிக்கு எதிராக 4(1)(C) TNP ACT படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>

கைப்பற்றிய மதுபாட்டில்களை கொட்டி அழிப்பதற்கு அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல.

காவல் ஆய்வாளர் மற்றும் துணை கண்காணிப்பாளர் ஆகியோர்கள் மதுபாட்டில்களை அழிப்பதற்கு அதிகாரம் உள்ளது என்றால் சரிதான்.

நான் சம்பவயிடம் செல்லாமல் புள்ளி விவரத்திற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் பாப்பிரெட்டிபட்டி.**